DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No. 327/2023 |
| Session | ... | |
| | | Prosecution / PW-1 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.பிரபாகரன் |
| Father's Name (or) Husband Name | : | த/பெ.அருள்சாமி |
| Village | : | பெரியார் நகர் (இ) ஆர்.எஸ்.மங்கலம் |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(A1 to A4 are absent U/s.317 Cr.P.C petition filed heard and allowed.)

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 17.04.2024

---

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்சமயம் ஆர்.எஸ்.மங்கலத்தில் வசித்து வருகிறேன். நான் பெயின்டர் வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். எதிரி

அந்தோணிச்சாமியின் தங்கையை நான் முதலில் திருமணம் செய்தேன். தற்போது அவரிடமிருந்து முறையாக விவாகரத்து பெற்று தற்போது இரண்டாம் தாரம் வேறு திருமணம் செய்து வாழ்ந்து வருகிறேன்.

2. 24.09.2022ம் தேதி தற்செயலாக பெரியார் நகரில் உள்ள வீட்டிலிருந்து எனது வேலைக்கு தேவைப்பட்ட சில சாமான்களை எடுப்பதற்காக நான் சென்றிருந்தேன். சாமான்களை எடுத்துவிட்டு திரும்ப எனது இருசக்கர வாகனத்தில் சர்ச் பக்கம் வரும்போது நான்கு எதிரிகளும் என்னை வழிமறித்து, அருவாள் கம்பை எடுத்து வந்து என்னை நான்கு பேரும் தாக்கினார்கள். எனக்கு விரலில் மட்டும் லேசாக காயம் ஏற்பட்டது நான் அவர்களுக்கு பயந்து தப்பித்து அங்கிருந்து எனது இருசக்கர வாகனத்தை அங்கேயே போட்டுவிட்டு ஓடிவந்துவிட்டேன்.

3. பின்னர் நான் வீட்டிற்கு வந்து அவசர போலிசுக்கு எனது அம்மா போனில் இருந்து போன் செய்தேன். அதற்குள் எதிரிகள் எனது இருசக்கர வாகனத்தை எரித்துவிட்டார்கள். போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து வாகனம் எரிந்ததை பார்த்து, விசாரித்து பின்னர் காவல் நிலையம் சென்று நான் நடந்த சம்பவத்திற்கு எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்கும்படி புகார் அளித்தேன்.

4. என்னிடம் காட்டப்படும் புகார்மனு நான் கொடுத்ததுதான். புகார்மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் **(அந்த புகார்மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் ஆனால் குறுக்கு விசாரணை செய்யவில்லை எனவே குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.</u>**